விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 3 ஷஃபான் 14 இதழ் 123

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-6-1981


## 6 வோக்குபெட்டிகளை காணவில்லை!

### 33 பெட்டிகள் எண்ணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலில் வாக்களிக்கப்பட்ட 6 வாக்குப் பெட்டிகளைக் காணவில்லை. வாக்களிப்பு தினத்தன்று 397 பெட்டிகள் எண்ணப்பட்டன. நேற்று 33 பெட்டிகள் எண்ணப்பட்டன.

33 பெட்டிகளிலும், மொத்தம் சுமார் 27,000 வாக்குகள் இருந்ததாகவும், கூட்டணிக்கு சுமார் 20,000 வாக்குகளும், ஐக்கிய தேசிய கட்சிக்கு சுமார் 4000 வாக்குகளும், தமிழ் காங்கிரஸிற்கு சுமார் 1000 வாக்குகள் இருந்ததாகவும் வாக்கு எண்ணிக்கையின் போது சமூகமளித்த கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ். அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் நேற்றுக் காலை 8 மணிக்கு மிகுதியான 33 பெட்டிகள் எண்ணும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கூட்டணி சார்பில் மானிப்பாய் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம், கூட்டணி மாவட்டசபை வேட்பாளர்கள் திரு. சு. நடராசா, திரு. சி. நாகராசா, சட்டத்தரணி எம். ஆலால சுந்தரம் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். யு. என். பி. சார்பில் திரு. ரி. சிவரத்தினம், திரு. சி. குணரத்தினம் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். தமிழ்க் காங்கிரஸ் சார்பில் பிரசார செயலாளர் திரு. ஏ. மாணிக்கசோதி திரு. என். தில்லைச்சிற்றம்பலம் ஆகியோர்

[ -ம் பக்கம் பார்க்க]

★ கூட்டணி 2,63,369 ★ ஐ.தே.க. 23,302 ★ காங்கிரஸ் 21,682

# கூட்டணிக்கு அமோக வெற்றி!

# 10 இடங்களையும் கைப்பற்றியது

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் 10 இடங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.**

**கூட்டணியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. சு. நடராசா யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.**

இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாவது இடத்தையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

தேர்தல் முடிவுகள் நேற்றிரவு 6-50 மணிக்கு அறிவிக்கப்பட்டன

யாழ். தேர்தல் அதிகாரியும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தேர்தல் முடிவுகளை அறிவித்த பின்னர், யாழ். அபிவிருத்திச் சபை உறுப்பினர்களாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 10 பேர் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், கூட்டணியைச் சேர்ந்த திரு. சு. நடராசா அபிவிருத்திச்சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களைப் பாராட்டுவதாகவும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. ராஜலிங்கம், மானிப்பாய் எம். பி' திரு. தர்மலிங்கம், மற்றும் கூட்டணி யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் முடிவுகள் அறிவிக்கும்போது சமூகமளித்திருந்தனர்.

கச்சேரிக்கு வெளியில் திரண்டிருந்த மக்கள் கரகோஷம் செய்து வெடி கொழுத்தி மகிழ்ந்தார்கள் மாவட்ட சபை தலைவர் திரு. சு. நடராசாவுக்கும், மற்றும் உறுப்பினர்களுக்கும்; ஆதரவாளர்கள் மாலைகள் சூட்டி அழைத்துச் சென்றனர்.

கச்சேரி வளவிற்குள்ளும் வெளியிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. [க]

| | | |
|---|---|---|
| ஃ | த. வி. கூட்டணி | 2,63,369 |
| ஃ | ஐ. தே. கட்சி | 23,302 |
| ஃ | தமிழ்க்காங்கிரஸ் | 21,682 |
| ஃ | சோஷலிஸ முன்னணி (சுயேச்சைக்குழு-1) | 4,191 |
| ஃ | சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி (சுயேச்சைக்குழு-2) | 3,455 |
| ✶ | பழுதானவை | 4,338 |

### உறுப்பினர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ், மாவட்டசபை உறுப்பினர்கள்:

எஸ். நடராசா [தலைவர்]. எஸ். நாகராசா, என். இராசேந்திரம், என். தம்பிமுத்து, ஏ நடராசா, சி. கே. சோமசுந்தரம், ஜே.எஸ். அழகையா, கே. சின்னத்துரை, எஸ். நடேசு, எஸ். பூபாலசிங்கம்,

### யாழ். எம். பி. மகிழ்ச்சி

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரு வெற்றியீட்டியிருப்பதுகுறித்து யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

''நான் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. எனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட இழப்பில், அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவு, பெருநிம்மதியும், ஆறுதலும் அளிக்கிறது. விரைவில் எனக்கு வீடு கிடைக்கும். உங்கள் அனைவரையும் சந்திப்பேன்'' என்று திரு. யோகேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

தமிழ்மக்களின் விடுதலை வேட்கையை

## அமைச்சர்களின் செயலினால் அழிக்கமுடியாது

### யாழ். அபிவிருத்திசபைத் தலைவர்

[யாழ்ப்பாணம்]

கிழக்கு மாகாண தேர்தல் முடிவுகளும் இன்றைய யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை முடிவுகளும் 'தமிழ் ஈழ' இலட்சியத்தை மீண்டும் தமிழ் மக்கள் வலியுறுத்தியுள்ளனர் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுறது.

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு, எஸ். நடராசா தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

திரு நடராசா மேலும் கூறியதாவது:

உலகமே கேட்டறியாத அநியாயங்கள் நடைபெற்றபின்பும் கொள்கையில்; இலட்சியத்தில் ஒன்றாக இணைந்து வெற்றியீட்டியுள்ளீர்கள். இது எமது அழியாத இலட்சியத்தைக் காட்டுகிறது.

தேர்தல் நடைபெற்று 12 நாட்களின்பின் முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. இப்படி உலகில் நடப்பது இதுதான் முதல் தடவையாகும். உலகில் வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் இப்படியான புதுமை நடந்ததில்லை.

தாமதத்திற்கு யார் காரணம்

[6ம் பக்கம் பார்க்க]


தேவை ஏற்படின் தொடர்புகொள்க!

யாழ் நகரில் பல்லாண்டுகள் சேவையாற்றி பலரின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

## விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மோட்டர்கள், டயனமோக்கள்
நீர் இறைக்கும் பம்புகள், மற்றும்
சகல மின்சார உபகரணங்கள் உங்கள்
திருப்திக்கமைய திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்புகொள்க:
Tel. 7346

## ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்

வருடாந்தம் ஆகக்கூடுதலான

## 25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
1981-1-1இல் எம்மிடம் இருந்த வைப்பாளர்
அனைவருக்கும் வைப்பு முடிவு காலத்தில்
3 வீத மேலதிக போனஸ்
எமது லாபத்தில் இருந்து வழங்கப்படும்.
உங்கள் பணத்தை விவேகமாக
முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி; 89190

# "கமலத்தின் பிரேதத்தை அரைகுறையாகப் புதைத்தோம்"

## கமலம் கொலைவழக்கு விசாரணை முடிந்தது

(புலோலிநிருபர் திருச்செல்வம்)

"கமலத்தை 2ம் எதிரியுடன் பயங்கரமான இடமான ஆனைவிழுந்தானுக்குக் கூட்டிச்சென்ற அன்று இரவு தான் கமலம் ஆனைவிழுந்தானில் கொலையுண்டார் என்பதையும், கமலம்கொலையுண்டபின் நான் தலைமறைவாக ஒளித்து ஓடினேன் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன்"

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த 1ம் எதிரி ராஜன் நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜரான சட்டத்தரணி எம். சோமசுந்தரத்தினால் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்ட 1ம் எதிரி ராஜன் குறிப்பிட்டதாவது:

"கமலத்தை ஆனைவிழுந்தான் சந்தியிலிருந்து தப்பி ஓடவிட்டிருந்தால் எங்களுக்கு பிரச்சினை வந்திருக்காது சந்தியை நோக்கி வந்த வெளிச்சத்தை வந்து பார்த்தபோது அது பொலிஸ் ஜீப் என அறிந்துகொண்டேன். கமலம் மயங்கி விழுந்தவுடன் நாங்கள் வெளிச்சத்தைக்கண்டதும் 2ம் எதிரி, "தூக்கடா மறைவிலே கொண்டு போவம்"

நான் சந்தியை நோக்கி வந்த வெளிச்சம் பொலிஸ் ஜீப் எனக் கண்டபின் திரும்பிப்போய் 2ம் எதிரிக்குப் பொலிஸ் ஜீப் என்று சொன்னேன். அதற்கு 2ம் எதிரி என்ன பிரச்சினையோ தெரியாது நாங்கள் கமலத்தைக் கூட்டி வந்ததை யாராவது கண்டு பொலிசிற்கு அறிவித்து பொலிஸ் தேடி வந்ததா என்று சொன்னார். மேலும், அவர் என்னை ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாமென்றும் எது வந்தாலும் தான் பார்ப்பேன் என்றும் சொன்னார்.

"நாங்கள் கமலத்தைக் கொண்டுபோன இடம் மணற்காடான இடமானபடியால் அங்கு பிரேதத்தைப்புதைத்து விட்டால் எவரும் கண்டுபிடிக்க முடியாது அப்படி கமலத்தின்பிரேதத்தை யாரும் கண்டுபிடிக்காவிட்டால் ஒரு பிரச்சினையும் வந்திருக்காது. கமலம் அங்குளங்களிடமிருந்து தப்பி ஓடியிருந்தாலும் தனது வீட்டிற்குப் போகும்வழி அவளுக்குத் தெரியாது. யாரையாவது சந்தித்தால்தான் அவர்கள் கூட்டிப்போக முடியும். ஆனால் அவர்களும் கமலத்தைப் பொலிசிற்குத்தான் கூட்டிப்போயிருப்பார்கள்.

"நாங்கள் கமலத்தைக் கொண்டுபோய் போட்ட இடம் ஆட்கள் போக்குவரத்து குறைவான இடம். நேரம் சென்றபின் அந்தப் பகுதியால் ஒருவரும் போவதில்லை. கமலத்தின் பிரேதத்தைபுதைக்காவிட்டால் ஆட்கள் காணுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆட்கள் கண்டால் எனக்கும் 2ம் எதிரிக்கும் பிரச்சினை வந்திருக்கும். கமலத்தின் பிரேதத்தைப் புதைக்காவிட்டால் நானும் 2ம் எதிரியும் கொலைக்குற்றத்திற்கு ஆளாவோம் என்பதும் எனக்குத் தெரியும்.

நாங்கள் கொலைக்குற்றத்திற்கு ஆளானாலும் கமலத்தின் பிரேதம் தாய்க்கு கிடைக்க வேண்டுமென்பதற்காகவே 2ம் எதிரியைப் பிரேதத்தைப் புதைக்கவேண்டாமென்று சொன்னேன். இறந்த கமலத்தைக் கோபியிடம் கூட்டிக்கொண்டுபோவதாக பொய் சொல்லித்தான் 2ம் எதிரியுடன் ஆனைவிழுந்தானுக்கு கூட்டிச்சென்றேன்.

ஒருபின்சனைக் கமலம் கலியாணம் கட்டுவது கமலத்திற்குப் பிடிக்காத விடயம். எனவே தான் கமலத்தை ஆனைவிழுந்தானுக்குப் பொய் சொல்லிக் கூட்டிச் சென்றோம் கமலத்தின் பிரேதத்தை அரைகுறையாகப் புதைத்துவிட்டு ஆனைவிழுந்தானைவிட்டு வெளியேறியபோது நேரம் இரவு ஒன்பது மணிக்குமேல் இருக்கும்.

"கமலத்தின் சடலத்தை அவருடைய பெற்றோர்கள் வேறு ஆட்கள் மூலமாகக் கண்டு பிடித்திருந்தால் கமலத்தின் கொலையில் எனக்கும் ஒரு பங்கு இருந்திருக்கும் என்று தெரிய வந்திருக்கும். அப்படித் தெரிய வந்திருந்தால் எனக்கு எதிராகப் பொலிசில் புகார் செய்திருப்பார்கள் பொலிசார் என்னைத் தேடிக் கைது செய்திருப்பார்கள் பொலிசார் எனக்குச் சித்திரவதையும் செய்திருப்பார்கள்.

கமலத்தின் தாய்க்கு கமலம் கொலையுண்டதைச் சொல்வதற்கு எனக்குத் தைரியம் இருக்கவில்லை. கமலம் கொலையுண்டபிறகு இந்தக் கொலைபற்றி நான் கமலத்தின் பெற்றோருக்கு ஒன்றுமே சொல்லவில்லை. நான் கமலத்தை 2ம் எதிரியுடன் பயங்கரமான இடமான ஆனைவிழுந்தானுக்குக் கூட்டிச் சென்ற அன்றிரவு கமலம் ஆனைவிழுந்தானில் கொலையுண்டார் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இக் கொலையைப் பற்றி பின்பு நான் கமலத்தின் தாய்க்குப் பொய் சொன்னேன் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். கமலம் கொலையுண்ட பின் நான் தலைமறைவாக ஒளித்து ஓடினேன். நான் சான்றுப் பொருட்களான 1 சோடி காப்பு, 1 சோடி ஜிப்சி என் பனவற்றைக் கொண்டுபோன பொழுது அவை கமலத்தின் உடையன என்று எனக்குத் தெரியாது. 1 சோடி காப்பை நான் மனோகரன் மூலமாக விற்பனை செய்த பிறகே பத்திரிகை வாயிலாக நான் கொண்டுவந்த நகைகள் கமலத்தினுடையவை என அறிந்தேன்.

இத்துடன் நீதிமன்றத்திற்கு உதவியாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி சோமசுந்தரம் குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டார்.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுப்பிரமணியம் மறு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.

இத்துடன் கமலம் கொலை வழக்கு விசாரணை பூர்த்தியடைந்தது

---

# அண்ணன்மறைவுதாங்காமல் தம்பி தற்கொலை

[யாழ்ப்பாணம்]

ஐந்து வருடங்களுக்கு முன்னர் அண்ணன் தற்கொலை செய்ததையிட்டு அடிக்கடி கவலைப்பட்டுக் கொண்டிருந்த தம்பி, நச்சுத்திரவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

மாதகலைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை இல்லைநடராசாவின் [வயது 19] மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்.மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் எஸ். பிரஸ் மரணவிசாரணையை நடத்தினார்.

விசாரணையின்பின் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [?]

---

# இன்றைய பலன்

ஆனிமாதம் 3ம் திகதி
புதன்கிழமை
(17-6-81)

மேடம்- மிகவும் வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப் போக்கினால் விபரீதம் விளையக்கூடும், முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்க சமயத்தில் ஆதரவுதருவார்.

இடபம்- தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும், புண்ணிய ஸ்தலமொன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்- தொழில்துறையில் வெற்றி, விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கை பல உண்டு, இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல்.

கடகம்- இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும், எதிர்பார்த்த பொருள்வரவும் இன்று கிடைக்கலாம், பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும், தரமான நாள்.

சிங்கம்- மனக்கவலைகளுக்கு இடமளிக்கும், கடமையில் தடை ஏற்படும், மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்வீர்கள், மதுபானத்தைத் தவிர்க்கவும்.

கன்னி- மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் தடை ஏற்படும், அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம், அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

துலாம்- அதிகாரப்பேற்றுக்கும் அதிக பொருள்வரவிற்கும் இடமுண்டு, ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள், குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்- அவசரப்போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும், மனதில் விரக்தி தோன்றும், வீணான சிந்தனையால் சோர்வு தோன்றும்.

தனு- எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது, மாணவர்களாயின் முன்னேற்றம் காணப்படும், எதிர்பாராத இடத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு.

மகரம்- பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும், சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும், குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும், மகிழ்ச்சியான தினம்.

கும்பம்- கருடப் பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டமிடுவார்கள், சிலருக்கு அந்நியவாசமும் அகால போசனமும் உண்டு.

மீனம்- உள்ளத்தில் அமைதி குன்றும், இல்லத்தில் பூசல்கள் தோன்றிமறையும், உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

சோதிடகலாநிதி
க வேலுப்பிள்ளை

---

# மருமகளின் திருமணத்துக்கு போக முடியவில்லையாம்

## மாமன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மருமகளின் திருமணத்திற்கு சொல்லவில்லை என்பதனால், மனக்கவலையடைந்த மாமன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அரியாலையைச் சேர்ந்த தம்பிஐயா கோவிந்தசாமியின் [வயது 65] மரணவிசாரணையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. என் எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவதினம், இறந்தவர் சாராயம் வாங்கிக் குடித்தபின் நச்சுத்திராவகம் அருந்தினாரென்று விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின்பின் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [ஏ]

---

# வயோதிபர் கொலை

## மகன் விளக்கமறியலில்!

(சாவகச்சேரி)

வயோதிபர்கொலை தொடர்பாக அவரது மகன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விடத்தற்பளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சரவணமுத்து (வயது 55 என்பவர் சம்பாவடிப்பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாகக் கொலைசெய்யப்பட்டு காணப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திரு. தென்னக்கோன் தலைமையில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஜயவர்த்தனா, சார்ஜன்ட் துரைராசா அடங்கிய கோஷ்டியினர் இது சம்பந்தமாகப் புலன் விசாரணை செய்து அவருடைய மகனான சிவகரன் என்பவரைக் கைது செய்தனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை அதிபர் திரு கே. சண்முகநாதன் பிரேதபரிசோதனை செய்தார் சாவகச்சேரி நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் விசாரணை நடத்தி சாட்சியங்களைப் பதிவு செய்தபின் குறித்த சரவணமுத்து சிவகரன்என்பவரை இம் மாதம் 24ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குப்படி உத்தரவிட்டார். (கு)

---

வல்லிபுரக்கோவிலுக்கு

# ரூ 17 லட்சத்தில் இராஜகோபுரம்

(புலோலி)

துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுமார் பதினேழு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இராஜகோபுர வேலைகள் ஆரம்பமாகியுள்ளன இந்த இராஜகோபுரம் 71 அடி உயரத்தைக் கொண்டதாக இருக்கும்.

பருத்தித்துறை துன்னாலை வல்லிபுரக் குறிச்சிப் பகுதி மக்கள் இந்த இராஜகோபுர அமைப்புக்கான ஆரம்பவேலைகளில் ஒரு பகுதியைச் சிரமதான முறையில் செய்து கொடுத்துள்ளனர். ஆலயதர்மகர்த்தா சபை இராஜகோபுரத்தை மிகத் துரிதகதியில் அமைத்து முடிப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றது. (அ)

---

# யுவதி தற்கொலை

(பண்டத்தரிப்பு)

வானொலியில்நாடகம்கேட்டு ரசிக்க விரும்பிய 16 வயது யுவதி ஒருவர் தமது வானொலிப் பெட்டிக்கு புதிதாக பற்றறிகள் வாங்க தாயர் பணம் கொடுக்க மறுக்கவே கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

சங்கானையைச் சேர்ந்த சிவசம்பு வசந்தா என்னும் 16 வயதுடைய யுவதியே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவர். இவரது மரணவிசாரணை திடீர்மரண விசாரணை அதிகாரியும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய திரு கே. சேனாதிராசா முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணை முடிவில் தற்கொலை என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

---

# ஆலாலுக்குப் பாராட்டு

(பூநகரி)

திரு. மு ஆலாலசுந்தரம் கோப்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பூநகரி அபிவிருத்திச்சபை பாராட்டியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கோப்பாய்த் தொகுதி உறுப்பினராகத் தங்களைத் தெரிவு செய்ததைப் பூநகரி அபிவிருத்திச்சபை மனப்பூர்வமாக வரவேற்பதுடன் மட்டற்ற மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்வதாக சபை திரு ஆலாலசுந்தரத்திற்குச் செய்தி அனுப்பிவைத்துள்ளது.. (வி)

# கமலம் கொலைவழக்கு மேல்நீதிமன்றம் செல்கிறது

## தமிழ்பேசும் ஜூரர்கள்முன் விசாரணை

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

வடபகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பொலிகண்டி மாணவி கமலம் கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் எதிரி ராஜன் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இரண்டாம் எதிரி றெபி ஏற்கனவே யாழ். மேல்நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டு பிணையில் இருந்து வருகின்றார்.

இக்கொலை வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே எஸ். மகேசன் முன்னிலையில் ஐம்பத்தெட்டு தினங்கள் விசாரணைசெய்யப்பட்டுவந்தது.

1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி சூரியஅஸ்தமனத்திற்கும் 22ம் திகதி சூரிய உதயத்திற்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் பொலிகண்டியைச் சேர்ந்த மாணவியான கமலம் இராமச்சந்திரன் [வயது 15] என்னும் இளம்பெண்ணை வராத்துப்பளை ஆலவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் வைத்துக் கொலை செய்ததாகவும், கொலையுண்ட கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான காப்பு ஜிப்சி தங்கநகைகளை கொள்ளையடித்ததாகவும் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கின் முதலாம் எதிரி பருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்தவரும் கொலையுண்ட கமலத்தின் ஒன்றுவிட்ட சகோதரருமான கந்தசாமி இராஜ்குமார் [இராஜன்] அல்லது வீரப்பன் என்பவராவர். இரண்டாம் எதிரி அதேஇடத்தைச் சேர்ந்தவரும் முதலாம் எதிரியின் நண்பருமான பொன்சியஸ் பெர்ணண்டோ [றெபி] அல்லது றெபின்சன் என்பவராவார்.

இக்கொலை வழக்கின் மரண விசாரணை நீதவான் திரு.கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்று, பின்னர் அவர் மேலதிக மாவட்ட நீதவானுக்குச் சென்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்று கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### காணவில்லை

கடந்த சனிக்கிழமை, காலையில், யாழ்ப்பாண பஸ் நிலைய வைரவர் கோவிலில், வழிபாடு செய்கையில் இரு கணக்குப் பதிவேடுகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். நியுசிவாயம்ஸ், 58 நவீன சந்தை, யாழ்ப்பாணம். 0045

### 6 வாக்குப்பெட்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

சமுகமளித்திருந்தார். சோஷலிச முன்னணி, சிறுபான்மை தமிழர் ஐக்கியமுன்னணி சார்பில் எவரும் சமுகமளிக்கவில்லை.

வேட்பாளர்கள், வாக்குகள் எண்ணப்பட்ட மண்டபத்திற்கு வெளியில் காணப்பட்டனர்.

நேற்று எண்ணப்பட்ட 33 பெட்டிகளிலும சுமார் 27,000 வாக்குகள் இருந்ததாகவும், அவற்றில் சுமார் 20,000 கூட்டணிக்கு இருந்ததாகவும் இடைவேளையின்போது வெளியில் வந்த திரு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

புன்னாலைக்கட்டுவன், ஈவினை பெட்டிகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே மிகக் கூடுதலான வாக்குகள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

**மேலதிக வாக்குகள்**

புத்தூர் வஞ்சிபுலத்து பெட்டியில் பதிவுசெய்யப்பட்ட வாக்குகளிலும் பார்க்கக் கூடுதலான வாக்குச் சீட்டுக்கள் வாக்குப் பெட்டிக்குள் இருந்ததாகவும் தெரிவித்தார்.

**ஐ. தே. க.வுக்கு 90 வீத வாக்குகள்**

கைதடி குருசாமி வித்தியாசாலை வாக்குப் பெட்டியிலும் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயப் பெட்டியிலும் யு என். பி.க்கே 90 வீதமான வாக்குகள் இருந்ததாகவும் கூறினர்.

இடைவேளையின்போது வெளியில் வந்த தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதி திரு.மாணிக்கசோதி, வாக்கு எண்ணிக்கையில் தெரிவித்த தகவல்களை ஆதரவாளர்களிடம் கூறினர்.

**104 வாக்குகள் கட்டாகக் கிடந்தன**

ஆனைக்கோட்டை வாக்குப் பெட்டியில் 104 வாக்குகள் ஒரு கட்டாக போடப்பட்டிருந்ததாகவும், அதில் 100 வாக்குகள் யூ. என். பிக்கும், 4 வாக்குகள் கூட்டணிக்கும் போடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

**10 வாக்குகள் மேலதிகம்**

பலாலி வடக்கு அரசினர் தமிழ்ப் பாடசாலை வாக்குப் பெட்டியில், பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் தொகை 1534 ஆக இருக்க 1544 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினர்.

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை பெட்டியிலிருந்த 1047 வாக்குகளில் சுமார் 900 வாக்குகள் யூ. என்.பிக்கு இருந்ததாகவும் கூறினர்.

**525 வாக்குகள் மர்ம மறைவு**

புன்னாலைக்கட்டுவன் அரசாங்கத் தமிழ் கலவன் பாடசாலையில் பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் 1544 ஆக இருந்ததாகவும், இதில் 950 பேர் வாக்களித்ததாகவும் வாக்குப் பெட்டியில் 425 வாக்குகள் மட்டும் இருந்ததாகவும் அவர் கூறினர்.

6 வாக்குப் பெட்டிகள் இல்லாததனால் எண்ணப்படவில்லையென்று, தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதி திரு மாணிக்கசோதி, இடைவேளையின் போது வெளியில் வந்த சமயம் ஆதரவாளரிடம் கூறினர்.

சில வாக்கு சீட்டுக்களில் உதயசூரியனுக்கும், யானைக்கும் புள்ளடி பாடப்பட்டிருப்பதாகவும். மற்றும் சில வாக்குச் சீட்டுக்களை சைக்கிளுக்கும், யானைக்கும் புள்ளடி போடப்பட்டிருந்ததாகவும், இதனால் அவ்வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னர்.

### அமைச்சர்களின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என ஆராயத் தேவையில்லை அது எல்லாருக்கும்தெரியும். யாழ். தேர்தல் அதிகாரி திரு. யோகேந்திரா துரைசுவாமியை கடமைசெய்யவிடாமல் தடுத்தும் தங்கள் இஷ்டம்போல் கருமங்களை மேற்கொண்டும் சில அமைச்சர்கள் நடந்துள்ளார்கள் பொறுப்புவாய்ந்த அமைச்சர்களின் செயலால் மக்களின் விடுதலை வேட்கையை அழிக்கமுடியாதென்பதை இன்றைய முடிவுகள் காட்டுகின்றன. [இ]

### நூல் வெளியீடு இன்று

[யாழ்ப்பாணம்]

''இணுவை யந்தாதி'' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவிருக்கிறது.

இந்நூல் வெளியீட்டு விழா யாழ். மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் தலைமையில் நடைபெறவுள்ளது. [த]


## அறிவித்தல்

யாழ்.நகரில் கடந்த நாட்களில் நடந்த அசம்பாவிதங்களினால் இலக்கம் 62A, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'ரதி வாச் வேர்க்ஸ்' [வேலைத்தலம்]ல் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. எனவே வாடிக்கையாளர்கள் வழமைபோல் தங்கள் மணிக்கூட்டு திருத்த அலுவல்களைக் கவனித்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு

ரதி வாச் வேர்க்ஸ்

நிர்வாகத்தினர் 0047

## அரிய சந்தர்ப்பம்

DIPLOMA IN HOTEL MANAGEMENT பயிற்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது. O/L or NCGE படித்தவர்கள் இன்றும் நாளையும் [புதன்-வியாழன்] நேரில் வரவும்.

NATIONAL ACADEMY

[Momsac Building]

11, STANLEY ROAD, JAFFNA. 0042

## V. R. V.

போக்குவரத்துச் சேவை

## அறிவித்தல்

**மீண்டும் யாழ் - திருமலை - யாழ் பஸ் சேவை ஆரம்பம்**

தவிர்க்க முடியாத காரணங்களினால் கடந்த ஒருவார காலமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட

**V. R. V. போக்குவரத்துச் சேவை**

மீண்டும் ஆரம்பமாகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரயாணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துகின்றோம்.

ஃ ஆசனங்களைப் பதிவு செய்யும் இடம்:

யாழ்: 1. றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்
போன்: 464, 7889

2. V. R. V. ரான்ஸ்போட்
சேகரம் கட்டிடம், கொட்டடி. போன்: 8162

திருமலை: நெஸ் கபே
401, டொக்யாட் வீதி, திருகோணமலை.
போன்: 482

பிரயாணிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ரூ 50,000 காப்புறுதிசெய்யப்பட்ட சேவை! சொகுசான சேவை.

**யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கு விரைவில் மாலை சேவை ஆரம்பிக்கப்படும்**

## மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- ஃ மத்தியகிழக்கு ஃ சிங்கப்பூர்
- ஃ பாரிஸ் ஃ நைஜீரியா
- ஃ லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி) ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

**உலகின் எப்பாகத்துக்கும்**

- ஃ எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

**விமான டிக்கட்டுகள்**

- ஃ வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்
- ஃ **நைஜீரியன் விசா**

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள பிரபல்யமான MACKINNON MACKENZIE & Co of (CEYLON) Ltdன்

ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

**மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்.**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

## தளபாடங்கள் தேவை

காரியாலய பாவனைக்கு உகந்த பாவிக்கப்பட்ட மேசைகள், நாற்காலிகள், அலுமாரிகள் போன்ற தளபாடங்கள் தேவைப்படுகின்றன. விற்பனை செய்யக்கூடியவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இலக்கம் 101, மே'பா. ஈழநாடு லிமிட்;
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100236/81, P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707 Registered as News Paper at the General Post Office. Sri Lanka